# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO.23 /2018

**27.07.2022 - வா.சா. 1 போர் மன்னன் சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் வழக்கறிஞர் ஆவதற்கு முன்னர் என்னுடைய ஆண்டு வருமானம் ரூ. 5 லட்சம். நான் வழக்கறிஞர் ஆன பிறகும் என்னுடைய ஆண்டு வருமானம் ரூ. 5 லட்சம் தான். ரியல் எஸ்டேட் தொழிலில் ஆண்டு வருமானம் ரூ. 5 லட்சத்திற்கு மேல் இருக்கும். 2001க்கு முன்பு நான் வருமான வரி செலுத்தி வந்தேன். எனக்கு வழக்கறிஞர் வி.ஜி. ரவிச்சந்திரன் என்பவரிடம் நான் ஜுனியராக பணியாற்றி வருகிறேன். நான் கவுன்சிலராக இருந்த போது என் மனைவி பெயரில் வருமான வரி செலுத்தி வந்தேன். என் மனைவி கவுன்சிலராக இருந்த போது என் பெயரில் வருமான வரி செலுத்தி வந்தேன். நான் அ.இ.அ.தி.மு.க வில் கவுன்சிலராக இருந்தேன். சுதாகர் என்பவர் உயர்நீதிமன்றத்தில் ரிட். தாக்கல் செய்யப்பட்டு Direction பெற்றார் என்றும், அதன் அடிப்படையில் திருவண்ணாமலை டவுன் காவல் நிலையத்தில் விசாரணைக்கு நான் ஆஜரானேன் என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் நான் சாவியையும், உரிய ஆவணங்களையும் சுதாகரிடம் கொடுத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தம் தயார் செய்யும் போது ரவீந்திர செட்டியாரின் வயது 60க்கு மேல் இருக்கும். அவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல அவர் நல்ல நிலையில் இருந்தார். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்பதைப்பற்றி எனக்கு தெரியாது ஆனால் அவர் மகன் சுதாகரை தெரியும். தாவா கிரைய ஒப்பந்தத்தில் சுதாகர் சாட்சி கையொப்பம் போடவில்லை. தாவா கிரைய ஒப்பந்தம் எழுதுவதற்கு முத்திரை வில்லையை ரவீந்திர செட்டியார் என் பெயரில் வாங்கி வந்திருந்தார். கிரைய ஒப்பந்தத்தை யார் தயார் செய்தார் என்றால் தற்போது நியாபகம் இல்லை. வா.சா.ஆ.1ஐ எழில்மாறன் என்பவர் கணிணி மூலம் பத்திரத்தை தட்டச்சு செய்தார். அவர் தான் வா.சா.ஆ.1ஐ தயார் செய்தார். தட்டச்சு செய்தவர் பெயர் மட்டும் தான் வா.சா.ஆ.1ல் இடம்பெற்றுள்ளது என்றும், அதை வரைவு செய்தவரும் எழில்மாறன் தான். வா.சா.ஆ.1ல் சாட்சி கையெழுத்து போட்ட 3 போ்களில் 2 பேர் இருவருக்கும் தெரிந்தவர்கள். நான் கொடுத்த ரூ.11 லட்சத்தை வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் பணமாக கொடுத்ததை எப்படி காட்டுவார்கள். வா.சா.ஆ.3, 5 வழக்கறிஞர் அறிவிப்பு தாவா சொத்து விலாசத்திற்கு கொடுத்தேன். வா.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பு டோர் லாக்டு என்று திரும்ப வந்துள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு வா.சா.ஆ.4ன் மூலம் தினமலர் நாளிதழில் பிரசுரம் செய்தேன். அதற்காக ரவீந்திர செட்டியார் வா.சா.ஆ.5 மூலம் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளார். அதன் பிறகு வா.சா.ஆ.6ன் மூலம் நாங்கள் Re-joinder கொடுத்துள்ளோம். பிரதிவாதிகள் மீது இவ்வழக்கை திருவூடல் தெருவில் இருப்பதாக விலாசம் காட்டி இவ்வழக்கை தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.5ல் ரவீந்திர செட்டியாருக்கு உடம்பு சரியில்லை என்றும், அவர் சென்னையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், மேற்கொண்டு ஏதாவது விவரம் வேண்டும் என்றால் வழக்கறிஞருக்கோ, அவரது மருமகன் நடராஜன் விலாசம் திண்டிவனத்திற்கு வழக்கறிஞர் அறிவிப்பையும், தாவா நகலையும் அனுப்புமாறு கூறியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு அவர் சொன்ன விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை. ரவீந்திர செட்டியார் சென்னையில் சிகிச்சை பெற்று வந்தார். ஒரு சொத்து கைட் லைன் மதிப்பை விட அதிகமாக விற்கப்படும் என்றால் குறைச்சலாகவும் விற்கப்படலாம். கிரைய ஒப்பந்த தேதியில் அதாவது 2012 முதல் 2017 வரையில் தாவா சொத்தின் மதிப்பு ஒரு சதுரடி 15000/- என்றால் சரிதான். தாவா கிரைய ஒப்பந்தத்தில் ஒரு சதுரடி ரூ.12500 என்று போடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1ல் இருப்பது

ரவீந்திர செட்டியாரின் கையெழுத்து இல்லை என்றும், அவரின் கையெழுத்து என்னால் போலியாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- போர்மன்னன்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.